வாடகை மோட்டார் வண்டிகளை கடத்திச் செல்லுதல்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் வாடகை மோட்டார் வண்டிகள் பல கடத்திச் செல்லப்பட்டது பற்றி காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) வாடகை மோட்டார் வண்டிகள் 1971-ல் நான்கு முறை இடையே கடத்திச் செல்லப்பட்டது என்றும், 1972-ல் (ஆகஸ்டுவரை) எட்டு முறை கடத்திச் செல்லப்பட்டன என்றும் காவலருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ) பின்னிரவில் டாக்சிகளில் ஏறும் சந்தேகத்திற்குரிய பயணிகளிடம் எச்சரிக்கையுடன் இருக்குமாறும், அவசியமாயின், அருகில் உள்ள காவல் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வாடகை மோட்டார் வண்டி வலவர்களுக்குக் காவல் துறைக் கமிஷனர் அறிவுரைகள் கூறியுள்ளார். 24 மணி நேரமும் ரோந்து வரும் காவலர் ரோந்து வண்டிகள் எப்போதும் விழிப்புடன் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் : விஞக்கள் 43, 44 ஒத்தி வைக்கப்படுகின்றன.

Tiruvalluvar Temple.

* 45 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state with reference to the answer given on the floor of the Legislative Council for Question No. 89 on 8th September 1970—

(*a*) the present stage of the renovation work of Tiruvalluvar Temple at Mylapore, Madras; and

(*b*) the probable date on which the work will be completed?

திருவள்ளுவர் கோயில்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் 8—9—1970-ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் 89-ம் எண் விஞவிற்கு அளித்த விடையினையொட்டி கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை–மயிலை திருவள்ளுவர் திருக்கோயிலைப் புதுப்பிக்கும் வேலை தற்போது எந்த நிலையில் இருக்கிறது ?

(இ) அது எப்போது நிறைவுறும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) இக் கோயிலின் திருப்பணி இன்னும் தொடங்கப் பெறவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தற்போதுள்ள வேலையை விரிவாகச் செய்ய இருப்பதாகவும், இதற்கான பணிகளுக்கு அரசு ஏற்பாடு செய்திருப்பதாகவும் நான் பத்திரிகையில் படித்தேன். எந்த முறையில் அதுபற்றி ஆராயப்படும் என்பதையும் அதுபற்றிய விவரங்களையும் அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்துவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, எற்கனவே அந்தக் கோவிலில், மைலாப்பூரில் இருக்கிற திருவள்ளுவர் கோவிலில் சுமார் 2 லட்சம் 40 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு திருமண மண்டபத்தைக் கட்ட வேண்டுமென்று திட்டம் தயார் செய்யப்பட்டு, அந்த வேலை பாதியிலேயே கொஞ்ச காலத்துக்கு முன்னால் நின்றுபோய்விட்டது. அப்படிப்பட்ட திருமண மண்டபத்தைத் தொடர்ந்து கட்டி முடிக்கவும், திருவள்ளுவர் கோவில் என்று தமிழ் நாட்டில் ஒரே ஒரு ஆலயம்தான் இருக்கிறது. சுமார் 10 லட்சம் ரூபாய் செலவில் திட்டமிட்டு இந்தக் கோவிலைப் புதிதாக உருவாக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்காக நம் தமிழ்நாட்டு முதலமைச்சர், கலைஞர் அவர்கள் புரவலராகவும், திருப்பணித் தலைவராக தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், செயலாளராக திரு. என். மகாலிங்கம் அவர்களும், பொருளாளராக திரு. ஈஸ்வர அய்யர் அவர்களும், உறுப்பினராக முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களும், அதேபோல் உறுப்பினராக சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் மாண்புமிகு சிலம்புச் செல்வர் அவர்களும், டாக்டர் மு. வரதராசனார், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. என். டி. சுந்தரவடிவேலு, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முரசொலி மாறன், சட்டப்பேரவை உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல், சட்டமன்ற உறுப்பினர் திருமதி டி. என். அனந்தநாயகி, மாநகராட்சி மன்ற உறுப்பினர் திரு. துளசிங்கம் அவர்கள் அறங்காவலராகவும், இப்படி திருப்பணிக் குழு உறுப்பினர்களாக ஏற்கெனவே நியமிக்கப்பட்டு, திருவள்ளுவர் ஆலயப் பணியைச் செய்யும் முயற்சியில் தற்போது அவர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

பி.ப.
4-40 **திரு. சா. கணேசன் :** திருவள்ளுவர் கோயிலைச் செம்மைப்படுத்துவது பற்றிய கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விடையில், திருமண மண்டப வேலை தொடங்கப்பட்டு, பகுதி வேலை இடையில் நிற்பதாகக் கருத்து தெரிவித்தார்கள். திருமண மண்டபம் கட்டுவது பற்றிக் குறை சொல்லவில்லை. நன்றாகக் கட்டட்டும். அங்கே திருமண மண்டபத்திற்குப் பதிலாக அறவுரை மண்டபம் என்று பெயரை வைத்து, அந்த மண்டபத்தில்

1973 பிப்ரவரி 6]

அறவுரைகள், சொற்பொழிவுகள் நடக்காதபொழுது, திருமணங்களுக்கு விட ஏற்பாடு செய்கிற முறையில் அந்தக் கோயிலில் அறவுரை மண்டபம் அமைத்து, அதைத் தொடங்கி நிறைவேற்றி, கோயிலேச் செம்மைப்படுத்தி, சிறப்பாக எல்லோரும் தமிழ் முறையில் வழி படும்படியான முறையில் அமைப்பதற்கு தக்க வகைகளைச் செய்து, அதை எவ்வளவு விரைவில் முடிக்க முடியும் என்பதற்குத் திட்டங்கள், வரைகள் அல்லது வரை படங்கள் போடப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, பாதியில் நின்று போன திருமண மண்டபத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல, குறளில் வந்திருக்கின்ற பண்புகளை எல்லோரும் தெரிந்து கொள்ளும் வகையில் வரை படங்கள், ஓவியங்கள், இன்னும் பல நல்ல தெளிவுரைகளைக் கொடுக்கும் வகையில் கட்டிடங்கள், மண்டபங்கள் எழுப்ப வேண்டுமென்று வரை படம் தயார் செய்யப்பட்டு, அவைகளைப்பற்றியெல்லாம் திருப்பணிக் குழுவில் பேசி முடித்திருக்கிறார்கள். அதுவெல்லாம் சீக்கிரம் துவங்குவதற்கான ஏற்பாடுகளை தற்போது அலுவலாளர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: வினுக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

---

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுந்தரேசத் தேவர் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும். 4–40 பி.ப.

3. ஆளுநர் உரையின் மீது விவாதம்

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். பலராமன் அவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கான திருத்தத்தைப் பிரேரேபிப்பார்.

TRUTH ALONE TRIUMPHS